TNPD110013282025

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை.**
**முன்னிலை**: திரு. நா.சிவபழனி, B.A.,B.L,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07ஆம் நாள் சனிக் கிழமை

**அசல் வழக்கு எண். 54/2025**
**CNR No-TNPD -11001328-2025**

1. அழகு
2. ரூபாவதி
3. அஞ்சப்பா
4. பேபி ராணி …... வாதிகள்

**//எதிராக//**

1. வட்டாட்சியர், கந்தர்வக்கோட்டை
2. மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை ……பிரதிவாதிகள்

இத்தாவா இந்நீதிமன்றத்தால் கடந்த 17.11.2025அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.P.செந்தில், M.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்புரை**

வாதிகளை இறந்துபோன வசந்தாவின் வாரிசுகள் என்று விளம்புகை செய்யக் கோரியும், செலவுத் தொகைக் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:26:26 +0530

**<u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் : –</u>**

1. வாதிகள் இறந்துபோன வசந்தா என்பவரின் உடன் பிறந்த சகோதரிகள் ஆவர். மேற்படி வசந்தா கடந்த 18.10.2024ம் தேதி புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா, குரும்பூண்டி வருவாய் கிராமம், நாட்டாணி கிராமம், வடக்கு தெருவில் இறந்துள்ளார். வசந்தாவின் கணவர் கண்ணன் என்பவர் அவர் இறப்பதற்கு முன்பே கடந்த 07.04.2000ம் தேதியன்று இறந்துள்ளார். வசந்தா மற்றும் கண்ணன் ஆகியோருக்கு வாரிசுகள் கிடையாது. வசந்தா இறக்கும் வரை அவரது சகோதரிகளான 1, 3ம் வாதிகளுடன் வசித்து, அவர்களின் பராமரிப்பில் இருந்து வந்துள்ளார். வசந்தா இறந்தபோது அவரது சகோதரிகளான வாதிகளே அவருக்கு செய்ய வேண்டிய ஈமச்சடங்குகள் அனைத்தையும் செய்துள்ளனர். வசந்தாவின் தகப்பனார் சம்பந்தம் கடந்த 10.12.2001ம் தேதியும், தாய் சின்னபொண்ணு கடந்த 09.10.2010ம் தேதியன்றும் இறந்துள்ளனர். அதனால் வாதிகளே வசந்தாவின் வாரிசுகளாக இருந்து வந்துள்ளனர்.

2. வாதிகள் கடந்த 17.10.2025ம் தேதியன்று 1ம் பிரதிவாதியிடம் வாதிகள் மட்டுமே வசந்தாவின் வாரிசுகள் என்று வாரிசு சான்று கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். ஆனால், 1ம் பிரதிவாதி வாதிகள் வசந்தாவின் நேரடி வாரிசுகள் இல்லை குறிப்பிட்டு வாரிசு சான்று வழங்க மறுத்து, நீதிமன்றத்தை அணுக வேண்டி அறிவுறுத்தியுள்ளார்.
எனவே, மேற்கண்ட பரிகாரம் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம் : –</u>**

3. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். தமிழக அரசாணை எண்.2906 வருவாய்த்துறை நாள். 04.01.1981 இன் படியும், த.அ.எண்.581 வருவாய்த்துறை நாள். 03.04.1987 ஆகியவற்றின் படியும் நேரடியான வாரிசுகளுக்கு மட்டுமே வாரிசு சான்று வழங்க வேண்டுமென்று


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:26:42 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்துபோன வசந்தாவின் கணவர் கண்ணன் என்பவர் வசந்தா இறப்பதற்கு முன்பே இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. கண்ணனின் உடன் பிறந்தவர்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. வாதிகள் ஆவணங்கள், வாய்மொழி சாட்சியங்கள் மூலம் தங்களது உரிமையை உறுதிப்படுத்தி உத்தரவு பெறுவதில் எந்தவித ஆட்சேனையும் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக உரிய முன்னறிவிப்பு கொடுக்கவில்லை. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கககூடியதில்லை. எனவே, இவ்வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. வழக்குரை மற்றும் பதிலுரை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

<u>**எழுவினாக்கள்:-**</u>

**1. வாதிகள் 18.10.2024ம் தேதி இறந்துபோன வசந்தா என்பவரின் வாரிசுகள் என விளம்புகை செய்யக்கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ?**

**2. வாதிகளுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது ?**

5. வாதிகள் தரப்பில் 1ம் வாதி அழகு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் ஆறுமுகம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதிகள் தரப்பில், குரும்பூண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த பவுல் வின்சென்ட் என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:26:54 +0530

6. இரு தரப்பிலும் செய்யப்பட்ட வாதங்கள், முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, மேலே வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்வு காண்கிறது.

<u>எழுவினா– 1:–</u>

**1. வாதிகள் 18.10.2024ம் தேதி இறந்துபோன வசந்தா என்பவரின் வாரிசுகள் என விளம்புகை செய்யக்கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ?**

7. வாதிகள் தங்களது தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் பொருட்டு, 1ம் வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்டுள்ள பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம், 22.09.2025 தேதியிட்ட வசந்தா என்பவரின் இறப்புச்சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 12.04.2000 தேதியிட்ட கண்ணன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 17.02.2014 தேதியிட்ட சம்மந்தம் என்பவரின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.11.2020 தேதியிட்ட சின்னப்பொன்னு என்பவரின் இறப்புச்சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.01.2021 தேதியிட்ட சம்மந்தம் என்பவரின் வாரிசுச்சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.
1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 17.10.2025 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்ப மனு கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 17.10.2025 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்ப மனு


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:27:03 +0530

1ம் பிரதிவாதியால் நிராகரிக்கப்படதற்கான உத்தரவு கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. மேற்படி வா.சா.ஆ.1 இறப்பு சான்றை பரிசீலனை செய்ததில் வசந்தா கடந்த 18.10.2024ம் தேதி இறந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 இறப்பு சான்றை பரிசீலனை செய்ததில் வசந்தாவின் கணவர் கண்ணன் என்பவர் கடந்த 07.04.2000ம் தேதி இறந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 இறப்பு சான்றிதழை பரிசீலனை செய்ததில், வாதிகளின் தந்தை சம்மந்தம் என்பவர் 02.01.2021ம் தேதியும், வாதிகளின் தாயார் சின்னப்பொண்ணு என்பவர் 04.11.2020ம் தேதி இறந்துவிட்டார்கள் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.5 வாதிகளின் தந்தை சம்மந்தம் என்பவரின் வாரிசு சான்றிதழை பரிசீலனை செய்ததில், இறந்துபோன சம்மந்தம் – சின்னப்பொண்ணு ஆகியோருக்கு வாதிகள் மற்றும் இறந்துபோன வசந்தா ஆகியோர் வாரிசுதாரர்கள் என தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆதார் அடையாள அட்டைகளில் வாதிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களான அமைந்துள்ளது. வாதிகள் பெயரில் வாரிசு சான்று வழங்கக் கோரி, வாதிகள், 1ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனுவை 1ம் பிரதிவாதி தள்ளுபடி செய்த உத்தரவின் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.11ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.11ஐ பரிசீலனை செய்ததில் மேற்படி மனுவானது வசந்தா என்பவருக்கு வாதிகள் நேரடி வாரிசுகள் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

9. மேலும் வாதிகள் தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஆறுமுகம் என்பவர் தனது சாட்சியத்தில், வாதிகளின் சகோதரி வசந்தா என்பவர் அழகு மற்றும் அஞ்சப்பா ஆகியோருடன் வசித்து வந்ததாகவும், அவர் கணவர் இறந்தபிறகு வசந்தா அழகு வீட்டுடன் வசித்து வந்ததால் அவரது ஈமசடங்குகளை வாதிகள் தான் செய்தார்கள் என்றும் வசந்தாவிற்கு யாரும் வாரிசுகள் இல்லாததால் வாதிகள் தான் வாரிசு என்ற விபரம் தனக்கு நேரடியாக தெரியும் எனறும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. வாதிகள் தரப்பில் குரும்பூண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த பவுல் வின்செண்ட் என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், நாட்டாணி கிராமத்தினைச் சேர்ந்த வசந்தா என்பவருக்கு தான் தான் இறப்புச்சான்று வழகினேன் என்றும், மேற்படி வசந்தாவின் கணவர் பெயர் கண்ணன் என்றும், வசந்தாவிற்கு கண்ணனுக்கும் வாரிசுகள் யாரும் இல்லை என்றும், தான் கிராமத்தில் விசாரணை செய்ததில் மேற்படி விபரம் தெரிய வந்தது என்றும், வசந்தாவின் சகோதரிகளான அழகு, ரூபாவதி, அஞ்சம்மாள், பேபிராணி ஆகியோர்தான் தற்போது அவரது வாரிசுகள் ஆவார்கள் என்பதை விசாரித்து தெரிந்துக் கொண்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. வா.சா.1, வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆகியோரின் சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் மூலம், வாதிகள் வசந்தாவின் உடன் பிறந்த சகோதரிகள் என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் வாதிகள் பெயரில் வாரிசு சான்று வழங்கக் கோரி வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த மனுவை, 1ம் பிரதிவாதி வாதிகள் வசந்தாவின் நேரடி வாரிசுகள் இல்லை என்பதால் நிராகரித்து தள்ளுபடி செய்துள்ளார். மேலே விவாதித்த படி, இறந்த வசந்தாவிற்கு நேரடி வாரிசுகள் இல்லை என்பதாலும், வாதிகள் தான் இறந்த வசந்தா என்பவருக்கு வாரிசுகள் என்பது தெரிய வரும் நிலையில், 1ம் பிரதிவாதி அதனை விசாரித்து, வாரிசு சான்று வழங்கியிருக்க வேண்டும். ஆனால் 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.11இன் மூலமாக வாதிகள் கொடுத்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டதால் வாதிகள் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள்.

12. இறந்துபோன வசந்தா என்பவருக்கு முதலாம் நிலை வாரிசுகள் யாரும் இல்லை என தெரிய வரும் நிலையில், இந்து வாரிசு உரிமைச்சட்டம் 1956 அட்டவணையில் கண்ட இரண்டாம் நிலை வாரிசுகளின் பட்டியலை இங்கு காண்பது பொறுத்தமானதாக இருக்கும்,

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:27:20 +0530

**Class II**

**I. Father.**

**II. (1) Son's daughter's son, (2) son's daughter's daughter, (3) brother, (4) sister.**

**III. (1) Daughter's son's son, (2) daughter's son's daughter, (3) daughter's daughter's son, (4) daughter's daughter's daughter.**

**IV. (1) Brother's son, (2) sister's son, (3) brother's daughter, (4) sister's daughter.**

**V. Father's father; father's mother.**

**VI. Father's widow; brother's widow.**

**VII. Father's brother; father's sister.**

**VIII. Mother's father; mother's mother.**

**IX. Mother's brother; mother's sister.**

**Explanation.- In this Schedule, references to a brother or sister do not include references to a brother or sister by uterine blood.**

13. இறந்துபோன வசந்தா என்பவருக்கு முதல் நிலை வாரிசுகள் யாரும் இல்லாததாலும், இரண்டாம் நிலை வாரிசுகளின் முதல் வரிசையில் உள்ள வசந்தாவின் தந்தை சம்மந்தம் என்பவர் இறந்துவிட்டதாலும், இரண்டாவது வரிசையில் உள்ள வசந்தாவின் சகோதரிகளான வாதிகள் இறந்துபோன வசந்தாவின் இரண்டாம் நிலை வாரிசுகள் ஆவார்கள்.

14. மேற்கண்ட சூழ்நிலையில் மேலே விவாதித்த படி, இறந்துபோன வசந்தாவிற்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என தெரியவரும் நிலையில், 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.11 மூலமாக வாதிகள் அளித்த மனுவை தள்ளுபடி செய்துள்ளதை பரிசீலித்து, வாதிகள் கோரிய பரிகாரத்தை வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதிகள் தங்கள் தரப்பு வழக்கை போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக உறுதிப்படுத்தியுள்ளதால், வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிகளுக்கு ஆதரவாக இவ்வெழுவினா–1க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:27:28 +0530

**<u>எழுவினா – 2:–</u>**

**2. வாதிகளுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது ?**

15. வாதிகளுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது ? என்ற எழுவினாவை கவனத்துடன் பரிசீலினை செய்ததில், எழுவினா–1க்கு வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளதால், வாதிகளுக்கு வேறு பரிகாரங்கள் ஏதும் கிடைக்கத்தக்கதல்ல என்று இவ்வெழுவினா–2க்கு தீர்வு கண்டு, வழக்கின் செலவுத் தொகையை பொறுத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் செலவு தொகைகளை, அவர் அவர்களே ஏற்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, இத்தாவாவை செலவுத்தொகையின்றி அனுமதித்து, வாதிகள் 18.10.2024ம் தேதி இறந்துபோனவசந்தா என்பவரின் வாரிசுகள் என விளம்புகை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின், இன்று 07.03.2026 இத்திறந்த நீதிமன்றத்தில் இவ் அவையறிய பகரப்படுகிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:27:33 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்:–</u>**

| **வாதிகள் தரப்பு சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் விபரம்** |
|---|---|---|
| வா.சா.1 | திருமதி. அழகு | 1ம் வாதி |
| வா.சா.2 | திரு. ஆறுமகம் | 3ம் தரப்பினர் |
| வா.சா.3 | திரு. பவுன் வின்செென்ட் | கிராம நிர்வாக அலுவலர், குரும்பூண்டி கிராமம் |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| **சான்று ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **சான்றாவணங்களின் விபரம்** | **யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.09.2025 | வசந்தா என்பவரின் இறப்புச்சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.2 | 12.04.2000 | கண்ணன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் | |
| வா.சா.ஆ.3 | 17.02.2014 | சம்மந்தம் என்பவரின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.4 | 04.11.2020 | சின்னப்பொன்னு என்பவரின் இறப்புச்சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.5 | 02.01.2021 | சம்மந்தம் என்பவரின் வாரிசுச்சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.6 | -- | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.7 | -- | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.8 | -- | 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை சலுடன் ஒப்பிடப்பட்ட நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.9 | -- | 4ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசனுடன் ஒப்பிடப்பட்ட நகல் | வா.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.10 | 17.10.2025 | வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்ப மனு கணினி பதிவிறக்க நகல் | வா.சா.1 |
| வா.சா.ஆ.11 | 17.10.2025 | வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்ப மனு 1ம் பிரதிவாதியால் நிராகரிக்கப்படதற்கான உத்தரவு கணினி பதிவிறக்க நகல் | வா.சா.1 |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:27:41 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**